# இராணுவ தீர்வைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை

## லண்டனில் கதிர்காமர் தெரிவிப்பு

[லண்டன்]

விடுதலைப் புலிகளுடன் அரசு நடாத்தும் யுத்தத்தில் அரசியல் தீர்வுகாண வேண்டும் என்ற விருப்பம் அரசாங்கத்திற்கு இருந்து வந்துள்ள போதிலும், தற்பொழுது இராணுவ ரீதியில் இப் பிரச்னையை அணுகுவதைத் தவிர வேறு வழியில்லையென இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

தற்போது லண்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயம்

(6ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 26 இதழ் 125
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 09 - 6 - 1995

விமானநிலைய குண்டுவெடிப்பு

## பருத்தித்துறை இளைஞர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலைய குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு தமிழ் இளைஞர்களும் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள் என புலனாய்வுப் பகுதியினர் தெரிவித்துள்

(6ம் பக்கம் பா.க்க)

★ வடக்கு - கிழக்கு போரை தீவிரப்படுத்த

# பாதுகாப்பு செலவு 90 மில்லியன் டொலர்களால் அதிகரிக்கப்படும்!

## நாடாளுமன்றில் 'போர்க்கால' பட்ஜட்

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கில் போரைத் தீவிரப்படுத்தும் முகமாக பாதுகாப்புச் செலவீனத்தை 90 மில்லியன் டொலர்களால் அதிகரிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இதற்காக வரி அதிகரிப்புக்களையும், வேறுசில நடைமுறைகளையும் அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது'**

**நேற்று நாடாளுமன்றம் கூடியபோது இதுபற்றிய விபரங்களை துணை நிதியமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் வெளியிட்டார்.**

போர் முயற்சிகளைத் தீவிரப்படுத்த கிடைத்தட்ட போர்க்காலப் 'பட்ஜட்' போன்ற தொன்றை நேற்று நாடாளுமன்றத்தில சமர்ப்பித்து அமைச்சர் பீரிஸ் உரையாற்றுகையில்:

அரசு பணவீக்கத்தையும். வேலையில்லாத் திண்டாட்டத்தையும் தடுக்க விரும்புகின்றது. அரசு ஒருபோதும் புதிய பணநோட்டுகளை அச்சிடாது. அத்தியாவசிய பொருட்களான பாண, உரவகைகளின் சலுகை வரிகள் அப்படியே இருக்கும். புதியவரிகள் அதைத தாங்கக் கூடியவர்கள் மீதே விதிக்கப்படும்.

ஆடம்பரப் பொருட்களினதும், மதுபான வகைகளின

[6ம் பக்கம் பார்க்க]

## ஒரு நாள் சம்பளத்தை வழங்க அமைச்சர்கள் முடிவு

(கொழும்பு)

அமைச்சர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஒருநாள் சம்பளத்தை பாதுகாப்பு நிதிக்குச் செலுத்த முடிவு செய்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கத்திற்கு மேலதிக பணம் தேவைப்படுவதனையடுத்தே மேற்கண்டவாறு முடிவெடுக்கப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் மேலும்தெரிவித்தார். தீ-கி

## பாதுகாப்பு செலவை சமாளிக்க பொருட்களின் விலையில் அதிகரிப்பு

(கொழும்பு)

அதிகரித்துவரும் இராணுவ செலவை ஈடுசெய்யும் முகமாக அரசாங்கம் சகல பொருட்களினதும் விலைகளை உயர்த்துவதற்கு திட்டமிட்டுவருவதாக நீதி மற்றும் பாராளுமன்ற அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: சகல பொருட்கள் மீதான விற்பனை வரியை அதிகரிப்பதன் மூலமே இராணுவ செலவீனத்திற்கு போதிய தொகையை பெறுவது சாத்தியமாகலாம்

[6ம் பக்கம் பார்க்க]

வடபகுதிக்கான

## கப்பல்சேவையை மீண்டும் ஆரம்பிக்க செஞ்சிலுவை தலைமையகம் முடிவு

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வடபகுதிக்கான அதன் கப்பல்சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முடிவுசெய்துள்ளது.

ஜெனிவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையகம் இதற்கான அனுமதியை நேற்று வழங்கியது.

காங்கேசன்துறை கடற்பகுதியில் சர்வதேச. செஞ்சிலுவைச் சங்கத்தினால் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்த 'சீ-டான்சர்' கப்பல் கடற்கண்ணியில்மோதி மூழ்கியதைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்திற்கான தனது சேவைகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சில தினங்கள் இடை நிறுத்தியிருந்தது

இதன் காரணமாக செஞ்சிலுவைச் சங்கத்தினரின்கடல மார்க்கமான சேவையில் பின்னடைவு ஏற்பட்டதாகவும் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சேவையைத் தொடர்உதற்கு ஜெனீவா தலைமையகத்தின் அனுமதியைப் பெறவேண்டியிருந்ததாகவும் கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதான பேச்சாளர் டொமினிக் ஹென்றி தெரிவித்தார்

மீண்டும் வடக்கிற்கான சேவையை தொடர ஜெனிவாவிலுள்ள தலைமையகம் முடிவெடுத்ததைத் தொடர்

(6ம் பக்கம் பாக்க)

## உணவுப் பொருள்களுடன் கப்பல்கள் புறப்படுவதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை துறைமுகத்திலிருந்து 1950 மெ தொன் மாவை ஏற்றிக்கொண்டு ஹபரணை கப்பல் இன்று 9ந் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறை துறைமுகம் நோக்கிப் புறப்பட்டு வருமென யாழ். மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கொழும்பிலிருந்து நிவாரணப்பொருட்களை ஏற்றிக்கொண்டு 'லங்கா முடித்தா' கப்பல் பருத்தித்துறைதுறைமுகத்தை நோக்கி இன்று புறப்படவுள்ளது. கொழும்புத் துறைமுகத்தில் தற்பொழுது தரித்து நிற்கும் 'ஹபறணை' கப்பல பொருட்களை ஏற்றிக்கொண்டு இன்னும் சிலதினங்களில்பருத்தித்துறை துறைமுகத்தைநோக்கிப்புறப்படவுள்ளது.

[6-ம் பக்கம் பார்க்க]

## 3 லட்சம் வெளிநாட்டவரை அமெரிக்கா வெளியேற்றும்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் தற்பொழுது சட்டபூர்வமாகக் குடியேறியுள்ளோரில் ஒரு குறிப்பிட்ட தொகையினரை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு வழிசெய்யும் வகையில் அமெரிக்க குடிவரவுக்- கொள்கையில் பாரிய மாற்றம் ஒன்று செய்யப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டத்தின்படி அமெரிக்காவில் தற்பொழுது சட்டபூர்வமாகக் குடியேறியுள்ள 8 லட்சத்து 50 ஆயிரம் வெளிநாட்டவர்களில் மூன்று லட்சம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்படவுள்ளனர்.

நேற்று முன்தினம் முதல் இப்புதிய குடிவரவுக் கொள்கை அங்கு நடைமுறைக்கு வந்துள்ளது. அமெரிக்காவில் குடியேறும் வெளிநாட்டவரின் தொகையை எதிர்காலத்தில் மட்டுப்படுத்தும் வகையில் இதில் பலபுதிய ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

அடுத்த ஐந்து ஆண்டுகளில்

(6ம் பக்கம் பார்க்க)

## இரு ரயில்கள் மோதல்; பல சேவைகள் ரத்து

(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தையில் நேற்று இரு ரயில் வண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதியதினால் பெருமளவு ரயில் சேவைகள் சீர்குலைந்துவிட்டதாக ரயில்வே திணைக்களம் அறிவித்தது.

காணந்துறையையும் ஹோமாகமவையும் நோக்கி நேற்று அதிகாலை 4-10 மணியளவில் சென்ற இரு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன. இச்சம்பவத்தையடுத்து 14 அலுவலக ரயில் சேவைகள் நேற்று ரத்துச் செய்யப்பட்டன.

இதனால் நேற்று பெருமளவிலான ஊழியர்கள் கொழும்புக்கு வேலைக்குச் செல்லவில்லை. அலுவலகங்களில் ஊழியர்களின் வரவு குறைவாகக் காணப்பட்டது.

-வி-கி

# கொல்களம் துப்பரவாக்கல்

[யாழ்ப்பாணம்]

கோட்டை பகுதியில் மாடுகளை இறைச்சிக்காக வெட்டும் கொல்களம் மாநகர சுகாதார பகுதியினரால் துப்பரவாக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த கொல்களம் மாடுகள் வெட்டும் ஒவ்வொரு நாளும் துப்பரவு செய்யப்பட்டு மருந்துகள் விசிறப்பட்டு வருவதாக சுகாதார பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 170.சி

# யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி யாழ்ப்பாணத்துக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

யாழ் மாவட்டதில் உள்ள கோட்ட கல்வி அலுவலகங்களுக்கு மாகாண கல்விப பணிப்பாளர் சென்று கோட்ட கல்வி உதவி பணிப்பாளர்களை சந்தித்து வருகின்றார். -170

## புலிகளின் குரல்
## நிகழ்ச்சி நிரல்

**1995–06–09**

வெள்ளி இரவு

08-02 கலைமஞ்சரி- நிகழ்ச்சி முதலில அறிமுகம்- அறிமுகமாவது மு. கந்தசாமி எழுதிய 'வேம்பின் பயன்கள்' எனும் நூல். அறிமுகத்தை அடுத்து சிறுகதை- ச. அருள் ராஜ் எழுதிய 'பயணம்'. சிறு கதையைத் தொடர்ந்து கவிதை- ந இராமநாதன் எழுதிய எங்கள் தேசம் அழகானது' ஆகியன கலைமஞ்சரியை அலங்கரிக்கும.

08-25 சுணப்பொழுது- இ: கண்ணம்மா எழுதிய மெஜா தயாளினி.

08-30 செய்திகள்.

08-[illegible]0 அரசியல் அரங்கம்- வே. பாலகுமாரன் எழுதிய 'பகலைடக் காய்களும் பலிக் கடாக்களும்'.

08-50 ஏர்முனை- நிகழ்ச்சியில் 'முருங்கை' குறு நாடகம்.

**1995–06–10**

சனி காலை

07-02 மாவீர வணக்கம்.

07-15 நீங்கள் கேட்டவை.

07-30 செய்திகள்.

07-35 பத்திரிகைச் செய்திகள்.

07-40 நீங்கள் கேட்டவை- நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## தமிழீழ வானொலி
## நிகழ்ச்சி நிரல்

**1995–06-09**

வெள்ளி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்.

05-02 எழுச்சி கீதம்.

05-10 புதியவை.

05-15 கணநேரக் காவியங்கள்.

05-30 மண்ணின் குரல்.

05-40 நேயர் கடிதம்.

05-45 வெற்றிச் சுவடுகள்,

06-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்.

06-02 நாடகம்- பொம்பிளை பார்க்கப் போறம் அங்கம்-5.

06-15 விளையாட்டுச் செய்திகள்.

06-25 என் தெரிவு.

06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

# ஜே.வி.பியின் அச்சுறுத்தல் தெற்கில் அதிகரித்து வருகிறது

(கொழும்பு)

தெற்கில் ஜே. வி. பி.யின் அச்சுறுத்தல் அதிகரித்து வருவதால் அவர்களையும் சமாளிக்க வேண்டிய நிலை அரசுக்கு ஏறபட்டுள்ளதாக 'சண்டே ஐலண்ட்' தெரிவித்துள்ளது

யூலை 15ம் திகதிக்கு முன் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படாவிடின் அரசுக்கு எதிராக போராட்டங்களை நடாத்தப் போவதாக ஜே. வி. பி. எச்சரிக்கை சுவரொட்டிகளை தெற்கில் பல பகுதிகளிலும் ஒட்டி வருவதுடன் பிரசாரக் கூட்டங்களையும் நடாத்தி வருகிறது.

இந்நிலையில் வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளை சமாளிக்கமுடியாது திணறும் அரசபடைகள் தெற்கில் ஜே. வி. பியையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஜே. வி. பி. யினரின் போராட்டத்தை எப்படி அடக்குவது என்ற வழிமுறை தமக்கு தெரியும் எனவும் அவர்கள் ஆயுதக் கிளர்ச்சியில் இறங்கினால் நசுக்கப்படுவார்கள் எனவும் பிரதிபாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேநேரம் தெற்கில் ஜே. வி. பி: க்கு எதிராக சுவரொட்டி பிரசாரங்களை மேற்கொள்ளவும் அரசு திட்டமிட்டுவருகிறது. - சி

## கோண்டாவில் தில்லையம்பதியில்
## (இன்று) ஏழாம் திருவிழா



ராகம்: சுருட்டி

பவஸாகரம் தீர்க்கும் பார்வதி
சிவகாமி
நவராத்திரி ஒளிரும் நவமணி
யானவளே
புவனேஸ்வரி தாயே புகலிட
மானவளே
தவத்திலைப் பகுதியினில் ஒளிமய
மானவளே
தில்லையப்பதியாளே சிவகாம
சுந்தரியே
தொல்லைகள் தீர்ப்பாயம்மா ஸ்ரீதேவி

ஆக்கம்;
கவிமாமணி ந. வீரமணிஐயர்

இரவு 7-30 மணி:

**பிரமன் நான் முகனை**
வரலாறு
என்னும் பொருள் பற்றி
சிவநெறித் தாண்டன்
செ. சத்தியமூர்த்தி (ஆசிரியர்)
சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்

எ-4971

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**மாணிக்கம் தங்கவடிவேல்**

[ஓய்வு பெற்ற தொழில்நுட்பவியலாளர்]

தோற்றம்: 19-12-1942 மறைவு: 11-6-1992

திதி: 09-6-1995

ஆண்டுகள் மூன்று ஓடிக் கடந்திட்டாலும்
தூண்டுமும் நினைவலைகள் மாறுது மாறுது
வேண்டுவன வெல்லாம் விருப்புடன் எமக்கீந்திங்கு
ஏற்றமாய் வாழ வழி வகுத்திரெம் தலைவா
காலத்தால் கரைந்திடாக் கல்விநற் கலைஞானம்
கோலமாய் நாமடைய வழிகாட்டி விட்டு
மாயமாய் மறைந்ததென்ன மாயன் விதியோ
ஆலடி ஐங்கரன் சரண்புகுந்து சாந்திபெற்
றுய்வீரையா

அன்னாரின் பிரிவால் துயர் உறும்:
**மனைவி, மக்கள்**

தங்கத்தாமரை
அல்வாய்

சி-1506

# ஒன்றிய ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் இலக்கிய ஒன்றுகூடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகவை அறுபதை அடைந்துள்ள கவிஞர் முருகையனுக்கு வரவேற்பு, மூத்த எழுத்தாளர் சி. வைத்திலிங்கம் அவர்களின் உருவப படத் திறப்பு என்பன அன்று விசேட நிகழ்ச்சிகளாக நடைபெறவுள்ளன; -சி

# தபாலில் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்காக நடாத்தப்பட்ட போட்டி பரீட்சையின் யாழ் மாவட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறு தபாலில் வந்து சேரும்என்று யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் என்று தெரிவித்துள்ளன.

இப்போட்டி பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் கொழும்பில் வெளியாகியுள்ளது கடந்த டிசம்பர் மாதம் இப்பரீட்சை நடத்தப்பட்டது. யாழ். மாவட்டத்தில் இருந்தும் நூற்றுக்கணக்கானோர் இப்பரீட்சையில் பங்குபற்றியிருந்தார்கள். -170 சி

# பரிசளிப்பு விழா

[உடுவில்]

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவு வதிவிட வேளாண்மை போட்டி பரிசளிப்பு விழா மருதனார் மடம் திறந்த வெளியரங்கில் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஐந்து மணிக்கு நடைபெற உள்ளது, பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் இவ் விழா நடைபெறும், 109

# பத்து மாதக் குழந்தையின் சடலம் கிணற்றிலிருந்துமீட்பு

(யாழ்ப்பாணம்)

வளவுக்கிணற்றில் இருந்து மீட்கப்பட்டதாக பத்துமாத ஆண் குழந்தை ஒன்றின் சடலம் கடந்த திங்கள் இரவு சங்கானை காவல்துறையினரால யாழ் போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சித்தங்கேணி பிள்ளையார் வீதியில் உள்ள வளவொன்றில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. அவ்விடத்தைச் சேர்ந்த பி. பிரசாந் என்ற பத்துமாத குழந்தையே சடலமாக ஒப்படைக்கப்பட்டது.

தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்த குழந்தை வளவில் உள்ள கிணற்றடிக்கு தவழ்ந்து சென்று கிணற்றில் தவறி விழுந்ததாக தெரிவிக்கப்பட்டது. மரண விசாரணையின் பின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. 90 - சி

# திருட்டைத் தடுக்க காவல்துறையினர் இரவுநேர கண்காணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரப்பகுதியில் கடந்த சிலநாட்களாக இடம்பெற்று வந்த வழிப்பறி, சைக்கிள் திருட்டுக்களை அடுத்து காவல் துறையினரின் பந்தோபஸ்து நகரப்பகுதிகளில் பலப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். நகரின் பல்வேறு இடங்களிலும், வீதிகளில் காவல்துறையினர் சாதாரண உடையில் இருந்தவாறே காவல் கடமையில ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இரவுநேர காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் காவல்துறையினர் சந்தேகத்திற்கிடமாக நடமாடுபவர்களை தீவிர சோதனைக்குட்படுத்துகின்றனர். 90-சி

## பாடசாலை மட்டத்திலான “சாளரம்” நடாத்தும்
# போட்டிகள் - 1995

மாணவர்க்கான

★ கட்டுரை ★ கவிதை
★ ஓவியப் போட்டிகள்

## முடிவுத் திகதி: 10-06-1995

விஞடி விஞப் போட்டி திறந்த போட்டியாக அமையும் ஐந்து மாணவர்களின் பெயரை 10-06-95ற்கு முன் கோட்டங்களுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களும், கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப பெறும்மாணவர்கட்கு சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்படும்.

— சாளரம் வெளியீட்டகம்

இல: 2, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1510)

### மணிவாக்கு

நன்றியை எதிர்பார்த்திருக்க பழகிக் கொள்வோம். எப்போதாவது அது கிடைக்கும்போது எதிர்பாராத பரிசாக அது இன்பம் தரும்.

டேர்கார்னெகி

## நமது நோக்கு

### தமிழ் மக்கள் மீது வன்செயல்

சந்திரிக்கா அம்மையார் தான் சிங்களப் பகுதிகளில் இனக்கலவரங்கள் தலைதூக்காத விதத்தில் நாட்டைப் பூரண கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறதாக கூறுகிறார்.

காலியில் நடைபெற்ற கடைகள் எரிப்பு சூறையாடல்கள் எதிரணியில் உள்ள பிரதான கட்சி ஒன்றின் தூண்டுதலின் பேரில் நடந்தது என்றும் சந்திரிகா கூறுகிறார். கடந்த சனிக்கிழமை நடந்த மேற்படி கலவரத்தை அடுத்து அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்தது. ஞாயிற்றுக்கிழமை ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் பழையபடி காலிப் பகுதியில் கலவரங்கள் ஆரம்பமாகியுள்ளன. எல்பிட்டிப் பகுதியில் உள்ள தோட்டங்களில் வாழும் தமிழர்களின் வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் தாக்கப்பட்டுள்ளார்கள், நால்வர் படுகாயம் அடைந்துள்ளனர். ஒரு எட்டு வயது சிறுமி கோரமாக கொலை செய்யப்பட்டுள்ளார். கலவரம் பரவக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதாக பொலிசார் கூறுகின்றனர்.

இவையெல்லாம் எதைக் குறிக்கிறது பௌத்த பேரினவாதிகள் அவர்கள் ஐ. தே. க.வில் இருந்தால் என்ன சுதந்திரக கட்சியிலிருந்தால் என்ன தமிழர்கள் தாங்கள் அடிமைகள், தாங்கள் தான் இந்நாட்டு மன்னர்கள் என்ற மனப்பான்மையுடன் ஏதாவது வகையில் சிறிதளவு ஆகுதல் தங்கள் நலன்கள் பாதிக்கப்படும் பட்சத்தில் தமிழர்கள் மீது வன்முறை உபயோகித்து அவர்களுக்கு பாடம் படிப்பிக்கின்றார்கள். இது காலத்துக்குக் காலம் சிங்களவர் தமிழருக்குச் செய்யும் அநீதி. அநியாயத்தை செய்த பின்னர் தமிழர்களைச் சிங்கள மக்களும் காப்பாற்றினார்கள் தானே. எல்லாச் சிங்களவர்களையும் இனவாதிகள் என்று கூறுவது சரியில்லை என்றும் வாதாடுபவர்களும் உண்டு. இதற்கு ஆமாம் சாமி போடும் தமிழர்களும் இல்லாமல் இல்லை.

அரசாங்கம். கூறுவது போல் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாகத் தெரியவில்லை. ஜனாதிபதியின் பிரசாரத் துறையைச் செயலாளர் ஒரு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். ஒவ்வொரு பிரதேச சபை மட்டத்திலும் ஜனாதிபதியினால் சமாதானக்குழுக்கள் அமைக்கப்படுகிறது என்றும் தீய சக்திகளால் தூண்டிவிடப்படக்கூடிய கலவரங்களை வராமல் தடுப்பதற்கு இக்குழுக்கள் வழிவகுத்து இயங்கும் என்று அவ் அறிக்கை கூறுகிறது. இவ் வேற்பாட்டைப் பார்க்கும்போது நிலைமை சீராகவில்லை என்பது புலனாகிறது.

அரசாங்கம் சமாதானக் குழுக்களை அமைப்பதிலும் அறிக்கைகள் விடுவதிலும் முன்னிற்கிறதே ஒழிய நிலமையைச் சீர் செய்ய, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட உடனடி ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. காலியில் சனிக்கிழமை நடந்த சம்பவங்களின்போது பொலிசாரும் இராணுவமும் நடப்பவற்றை பார்த்து இரசித்துக் கொண்டிருந்ததாகவும் ராணுவச் சிப்பாய்ஒருவர்நேரடியாக பங்கு பற்றினார் என்றும் தகவல்கள் கிடைத்துள்ளன. அன்றிரவு தென்பகுதியில்பெய்த கடும் மழை தான்நிலவரத்தைப் பரவ விடாமல்தடுத்தது. மழை இல்லாவிட்டால் நிலமை கட்டுக்கடங்காமல் போயிருக்கும். பொலிசாரினதும் இராணுவத்தினதும் பக்க சார்புபபோக்கை சமீபத்தில்பிரதி அமைச்சர் பெர்ணண்டோபுள்ளே நீர் கொழும்பில் மாநகரசபையில் நடத்திய கூட்டமொன்றும் உறுதிப்படுத்துகிறது. அக்கட்டத்தில் அவர் பாதிக்கப்பட்ட தமிழர்கள் நக்க சமயம் தகவல்களை கொடுத்தும் பொலிசார் நடவடிககை எடுக்காத சந்தர்ப்பங்கள் இருக்கின்றதுஎன்று குறிப்பிட்டுள்ளார்.

இப்போது அரசாங்கம் செய்யவேண்டியது சிங்களவர்கள் மத்தியில் வாழும் தமிழர்களின் உயிரையும் உடமையையும் பாதுகாப்பதற்தான உடன்செயல் திறனுள்ளநடவடிக்கையேயொழியவாய்ப்பேச்சல்ல.

★ இந்திய - பர்மிய எல்லையில்

# 'குக்கி' இன ஆதிவாசிகளுடன் தமிழர் மோதல்; 14 பேர் பலி

(புதுடில்லி)

இந்திய - பாமிய எல்லையில் உள்ள இந்திய நகர் ஒன்றில் அங்கு சென்று குடியேறிய தமிழர்களுக்கும் உள்ளூர் 'குக்கி' ஆதிவாசிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் 5 தமிழர் உட்பட 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்திய வட - கிழக்கு மாநிலமான மணிப்பூரில எல்லைப்புற நகரான மூரே என்ற இடத்தில் நேற்று முன்தினம் மாலை இந்த மோதல வெடித்தது. தமிழ் வர்த்தகர்களுக்கும் 'குக்கி' இன மக்களுக்கும் வர்த்தக அடிப படையில்ஏற்பட்ட பிரச்னையே மோதலில் முடிநதது.

நேற்று முன்தினம் மாலை ஆயுதம் தரித்த 'குக்கி' இனததவர் தமிழரின் வர்த்தக நிலையங்களை தாக்கி ஒரு தமிழரை கொன்றனர்.

இதையடுத்து அன்று இரவு தமிழர்கள் தாக்கியதில் ஐந்து குக்கி இனத்தவர் உயிரிழந்தனர். ஆத்திரமடைந்த குக்கி இனத்தவர் இரவோடு இரவாக தமிழரின குடியிருப்புகளை திருப் தாக்கியதில் இரு தமிழர் கொல்லப்பட்டனர். இம்மோதலில் இரு தரப்பினரதும் 60 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

இதையடுத்து ஊரடங்கு உததரவு பிறப்பிக்கப்பட்டு அங்கு இராணுவமும் வரவழைக்கப்பட்டுள்ளது. நேற்று படையினர் ஆறு தமிழர்களின் சடலங்களை மீட்டுள்ளனர்.

1960ல் பர்மாவில் இருந்து விரட்டப்பட்டு ஒடி வந்து மூரே பகுதியில் குடியேறி இருப்போரே இந்த தமிழர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

-சி

# காரைநகர் கடற்படை முகாமிலும் பெருமளவு படையினர் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமிலும் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாட்களாக தென்பகுதிக்கும் காரை நகர் கடற்படை முகாமுக்குமிடையிலான கப்பற் போக்குவரத்து அதிகரித்து காணப்படுகிறது. இக்கப்பலகள் மூலம் கடற்படை முகாமில பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு வருவதாக கூறபபடுகிறது

இதேவேளை சடந்த சில தினங்களாக பலாலி இராணுவ தளத்திலும் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் காங்கேசனதுறை துறைமுகத்துக்கு கப்பலகள் மூலம் கொண்டு வரப்படும் படையினர் அங்கிருந்து பலாலி தளத்திறகு அனுப்பப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்.குடாவில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளும் பொருட்டே இவ்வாறு படையினரும், இராணுவ தளபாடங்களும் குவிக்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. எவ்வேளையிலும் யாழ். குடாவில் பாரிய படை நடவடிக்கைக்கு படையினர் தயாராகி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

-சி

# காலியில் கடைகள் எரிப்புக்கு பௌத்த பிக்குவே சூத்திரதாரி

[காலி]

காலியில் தமிழரின் கடைகள் எரிக்கப்பட்ட சம்பவம் குறித்தும் தமிழ் சிறுமி ஒருவர் படுகொலை செய்யப்பட்டது குறித்தும் பௌத்த பிக்கு ஒருவர் தேடப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமிழரின் கடைகளை தீக்கிரையாக்கவும், தமிழருக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டி கலவரம் ஒன்றை ஏற்படுத்தவும் இந்த பௌத்த பிக்குவே காரணமாயிருநத தாகவும் பொலிஸார் கருதுகின்றனர்,

இந்த பௌத்த பிக்குவின் தூண்டுதலின் பேரிலேயே சிங்களக் காடையர்கள் தமிழர்களின் கடைகளுக்கு தீ மூட்டியதுடன் பெரும் கலவரம் ஒன்றையும் ஏட்படுத்த திட்டமிட்டிந்ததாகவும் புலனய்வு விசாரணைகள் மூலம் செரிய வந்துள்ளதாக கூறப்படுகிறது. இவரை உடனடியாக கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளதையடுத்து இவரை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காலி கடைகள் எரிப்பு தொடர்பாக 16 பேரும் எல்பிட்டியில் நடைபெற்ற கொலை மற்றும் வீடெரிப்புகள் தொடர்பாக 13 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறுமியின் கொலை தொடர்பாக இராணுவ சிப்பாய் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்,

-சி

## வெள்ளி விருந்து

### மனச்சோர்வை அகற்றுக!

மனச் சோர்வு மனிதனை என்ன பாடு படுத்துகிறது! அதனை வென்று வாழ்வதே அறிவுடமையாகும். மனச் சோர்வு சோம்பலை வளர்க்கும்.

சோம்பல் மிகுமானால் வாழ்வு சிறப்பது எவ்வாறு? அது நம்மை நல்லோர் கூட்டுறவினின்றும் விலகச் செயகிறது, "மடியுடையார் [சோம்பல் உடையவர்] மாண்பயன் எய்தல் அரிது" என்கிறார் வள்ளுவர் மனச்சோர்வு நம்மை எக்காலத்தும் துன்பத்தில் உழலுபவர்களாகச் செய்து விடுகிறது. வாழ்வில் கரையேற முடியாத கொடுமைக்கு ஆளாக்கி விடுகிறது.

மனச் சோர்வை வென்று வாழவேண்டுமானால் முதற்கண் நம் உள்ளத்து எழும் கீழான எண்ணங்களை அறவே அகற்ற வேண்டும். நம்மைக் கோழைகளாக்கும் தாழ்வு உணர்ச்சியை ஒழிக்க வேண்டும். நேர்மையற்ற சிந்தனை எதுவாயினும் அதனை முற்றுக நீக்க வேண்டும்!

— தி. சிவகுருநாதன்

[தர்மச் சக்கரம் — 12-12]

# காஷ்மீரில் கண்ணிவெடி. இராணுவ அதிகாரி பலி

(ஸ்ரீநகர்)

இந்தியாவில் இடம் பெற்ற நிலக் கண்ணி வெடித்தாக்குதலில் இந்திய ராணுவ அதிகாரி ஒருவர் உட்பட நான்கு ராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

காஷ்மீரில் இஸ்லாமிய போராளிகள் வைதத கண்ணி வெடியிலேயே இவர்கள் கொல்லப்பட்டனர்.

இதனிடையே சீக்கியபொற்கோயில் மீது இந்திய ராணுவம் நடத்திய தாக்குதலின் 16 ம் ஆண்டின் நினைவாக காஷ்மீரிலுள்ள சீக்கியபோராளிகள் இந்திய இராணுவத்திற்கு எதிராக பொது வேலை நிறுத்தத்திற்கு நேற்று முன்தினம் அழைப்பு விடுத்திருந்தனர்.

-ரி

# ஆதரவற்ற நோயாளருக்கு பௌர்ணமி தினங்களில் இலவச உணவுப் 'பார்சல்

[வேலணை]

வடபிரதேச இந்து இளைஞர் பேரவையினர் பௌர்ணமி தினங்களில் யாழ் அரசினர் போதனா வைத்தியசாலையில் விடுதிகளில்தங்கி சிகிச்சை பற்றுவரும் ஆதரவற்ற நோயாளர்களுக்கு இலவச உணவு பார்சல்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.

பேரவையின் தலைவர் திரு. பி. சந்திரசேகரம் தலைமையில் யாழ். மணிக்கூட்டு வீதியில் உள்ள மெய்கண்டதேவர் ஆதின மண்டபத்தில் நடைபெற்ற பேரவையின் மாதாந்தக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இச் சேவையினை திறம்பட நடாத்துவதற்கு பேரவையின் பிரதித்தலைவரும் ஊர்காவற்றுறை கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளருமான திரு, கனகசுந்தரம் தலைமையிலான உபகுழு 'அரவணைக்கும் கரங்கள்' என்ற பெயரில் செயல்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது,

75-சி

## பலதும் பத்தும்

### சுரப்பிகள்!

எமது உடலில் பல சுரப்பிகள் வேலை செய்கின்றன அல்லவா? இவற்றில் சில வித்தியாசமானவை. குறிப்பாக... தைராய்டு, பிட்யூடரி, அட்ரினங்கள், பால சுரப்பிகள் போன்றவற்றை நாளமில்லாச் சுரப்பிகள் என்கிறோம். அவை சுரக்கும் திரவங்கள், நாளங்கள் இல்லாமலே... நேரடியாகவே இரத்தத்தில் கலந்துவிடுமாம்!

தைராய்டின் மந்தமான செயற்பாடு, குழந்தைகளுக்கு விபரீதமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. குள்ளத் தன்மை, தடைப்பட்ட மனோ வளர்ச்சி, மந்தமாகச் செயற்படுதல், அடிக்கடி நோய்வாய்ப்படுதல், சோர்வு, கவனக் குறைவு ஆகியவற்றுக்கு அதுவும் ஒரு காரணமாம். சில தைராய்ட் மருந்துகள் மூலம் குணம் காணலாம் என்கிறார்கள் மருத்துவர்கள்!

— மயூரன்

கூட்டுக் குப்பை சேர்த்திடு - அதை
கட்டுப் பணமாய் பார்த்திடு

## எழுதுநர் தெரிவுப் பரீட்சை 17ம் திகதி நடைபெறும்

(திருநெல்வேலி)

பொது எழுதுனர் சேவைக்கும் அதன்ளுேடிணைந்த சேவைகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப்பரீட்சை இம்மாதம் நடைபெற உள்ளது

மேற்படி பரீட்சை இம்மாதம் 17 ம் திகதிநடைபெற உள்ளது. பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் விரைவில் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளது.

இப்பரீட்சைக்கு மேற்பார்வையாளர்களை கல்வித் திணைக்களம் ஒழுங்குசெய்துள்ளதுடன் 16 ம் திகதி பரீட்சை மேற்பார்வையாளர் அதற்கான ஆவணங்களைப் பெறவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பரீட்சை வினுத்தாள்களை அன்று காலை எட்டு மணிக்கு மேற்பார்வையாளர்கள் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

157 - கி

## ★ 100 ஹெலிகள், 3500 துருப்புக்கள் தயார் நிலையில்

# சேர்பியர்வசமுள்ள ஐ.நாபடையினரை அதிரடிமூலம் மீட்க அமெ. தயாராகிறது

(லண்டன்)

பொஸ்னியாவில் விடுதலை செய்யப்படாமல் இருக்கும் 250 ஐ நா. அமைதி காக்கும் படையினரை விடுவிப்பதற்காக' அமெரிக்கா 100 ஹெலிகொப்டர்களேயும், 3,500 அதிரடித் துருப்புக்களை யும் பொஸ்னியாவிற்கு அனுப்புவதற்குத் தயாராகுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொஸ்னியாவில் சேர்பியர் வாழும் பகுதிகள் மீது நேட்டோ படையினரின் வான் தாக்குதல்கள் நடைபெறமாட்டாது என ஐ. நா உத்தரவாதம் அளிக்கும் வரை, தாம் சிறைப்பிடித்திருக்கும் மிகுதி ஐ. நா. அமைதிப் படையினரை ஒருபோதும் விடுவிக்கமாட்டோம் எனச் சேர்பியத் தலைவர்கள் கூறியுள்ளனர்.

பொஸ்னிய - சேர்பியப் படையினரால் முன்னர் சிறைப் பிடிக்கப்பட்ட ஐ: நா. படையினரில் 150 பேரை சேர்பியர் சடந்த வாரம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தார்கள். மிகுதி ஐ நா. படையினரை விடுதலை செய்வதற்குச் சேர்பியர் மறுப்புத் தெரிவித்து வருவதாலேயே, அவர்களை விடுவிப்பதற்காக அமெரிக்கா தனது துருப்புக்களை பொஸ்னியாவுக்கு அனுப்புவதற்குத் தயாராகின்றது.

3,500 அதிரடித் துருப்புக்களையும், 100 ஹெலிகொப்டர்களையும் அமெரிக்கா பொஸ்னியாவுக்கு அனுப்புவதற்கு முன்னர், பாரிய விமானம் தாங்கிக் கப்பல் ஒன்றையும் பொஸ்னியா நோக்கி அனுப்பியுள்ளது.

இதேவேளை தம் வசமிருக்கும் ஐ. நா. அமைதிப் படையினரில் 100 பேரை விடுதலை செய்வதற்குச் சேர்பியர் கடைசி நேரத்தில் சம்மதம் தெரிவித்திருப்பதாகக் கடைசியாக வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

வி கி

# பிரசார. போரிலும் அரசு இறங்குகிறது

(கொழும்பு)

''அரசாங்கம் நிலமையை கட்டுப்பாட்டில் வைத்துள்ளதோடு' விடுதலை புலிகளை ஆயுதப் படையினர் அடக்குவார்கள் என்ற நம்பிக்கையிலும் உள்ளது.''

இந்த எண்ணக் கருத்தை மக்களிடம் பரப்புவதற்கு பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கேணல் ரத்வத்த, பல கூட்டங்ளை நடத்தியுள்ளார் என சண்டே ரைம்ஸில் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்தார்.

போர் ஒரு பக்கம் நடக்கும் தறுவாயில், மக்கள் குழப்பமடையாமல் இருக்கவே இந்த ஏற்பாடு.

அரசாங்க அதிபர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள், சிறிலங்கா சுகந்திரக்கட்சி அமைப்பாளர்கள் ஆகியோரை வரவழைத்து பல தொடர்ச்சியான கூட்டங்களை அவர் நடத்தியுள்ளார்.

இதில் பங்கு பற்றியோரை, அரசாங்கத்தினர் நிலமையை மக்களுக்கு எடுத்துக்கூறுமாறும் பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் அச்செய்தியாளர் மேலும் அதில் தெரிவித்துள்ளார். (கே சி)

## கதிரைகள் திருட்டு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறையில் ஜே. எம். சிவப்பிரகாசம் என்பவரின் வீட்டு விருந்தையில் இருந்த பெறுமதி மிக்க இரு கதிரைகளைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை இனந்தெரியாத நபர்கள் திருடிச் சென்றுவிட்டனர்.

இச்சம்பவம் குறித்து அவர் தமிழீழக் காவல்துறையில் புகார் செய்துள்ளார். 154

## ஆலயங்கள் அழிக்கப்படுவதை இனியும் அனுமதிக்க முடியாது

(யாழ்ப்பாணம்)

''கடந்த கால வரலாறுகளைப் பார்ப்போமேயானல், உலக நாடுகளில் யுத்த காலங்களில் வணக்க ஸ்தலங்கள், மக்கள் கூடும் இடங்கள் போன்றவை போர் நடவடிக்கைகளில் இருந்து தவிர்க்கப்பட்டு வந்தன. ஆனல் எமது பிரதேசத்தில் இன்று நடைநடைபெறும் போரில், திட்டமிட்ட வகையில் எமது வணக்க ஸ்தலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இவ்வகையான திட்டமிட்ட அழிப்பு வேலைகளை நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

நல்லை ஆதீன மண்டபத்தில் அண்மையில அகில இலங்கை இந்து சமயப் பேரவையால் நடத்தபபடவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணி தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தமது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பேராசிரியர் சண்முகதாஸ் தொடர்ந்து உரையாற்றுகையில்; அரச படையினரின் அழிப்பு நடவடிக்கைகளிலிருந்து எம்மையும், எமது பிரதேசத்தையும் பாதுகாத்துக் கொள்வதில் எமது போராளிகள் ஈடுபட்டிருக்கும் இந்த வேளையில், நாம் எப்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ரேம் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

சரித்திரப் புகழ் பெற்ற இந்து ஆலயங்கள, எதிரிப் படையினரால் அழிக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் தொண்டைமானறு செல்வச் சந்நிதி ஆலயம் இராணுவத்தினரின் ஷெல் தாககுதலினுல் பலத்த சேதத்திற்குள்ளானது. கீரிமலை நகுலேஸ்வரர், மாவிட்டபுரம், திருக்கேதீஸ்வரம் போன்ற இந்துக்களின் வரலாற்றுப் புகழ் பெற்ற புனித ஸ்தலங்கள இன்று எதுவித பூசை, வழிபாடுகளுமின்றி, இராணுவ ஆக்கிரமிப்புககுஉள்ளாகியிருக்கின்றன. இந்த வகையில் எமது புனித ஸ்தலங்கள் அரச படையினரால் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன,

சிறிலங்கா அரசின் இந்த வகையான செயல்களைத் தொடர்ந்தும் நாம் அனுமதிக்காது, இந்த மண்ணில நாம் ஒரு மக்கள் சக்தியை உருவாக்க வேண்டியது அவசியமாகிறது. எமது மக்கள் அனைவரும் இன்றைய இந்த நிலைப்பாட்டை உணர்ந்து, ஒன்று சேர்ந்து அரசுக்கு எதிராக எமது ஏகோபித்த கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். 162 கி

## யூலைகறுப்புநாளை நினைவுகூர ஏற்பாடு

(உடுவில்)

யூலை கறுட்பு நாளையும், புத்தூர் கிழக்கு மாவீரர்களையும் நினைவுகூரும் முகமாக வருடம் தோறும் நினைவுக் கூட்டங்களை நடத்திவரும் புத்தூர் கிழக்கு ஸ்ரீவிக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் இவ்வருடமும் அத்தினத்தை சிறப்பாகக் கொண்டாட நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இதுசம்பந்தமாக மேற்படி விளையாட்டுக் கழகம் எதிர்வரும் 11ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்கு கழக மைதானத்தில் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியொன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

புத்தூர் மகாத்மாஜீ, அறிவொளி மகாத்மா காந்தி சனசமூக நிலையங்கள் ஒன்றிணைந்து விழாவினை நடத்த உள்ளன.

(109-சி)

## வீதி சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி பிரதான வீதி மிகமோசமாகப் பழுதடைந்து குன்றும் குழியுமாக இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

இப்பாதையூடாக பெருமளவு பாடசாலை மாணவர்கள், அரசதிணைக்கள ஊழியர்கள், பொதுமக்கள் தினமும் சைக்கிள்கள் மூலமும், பஸ் மூலமும் பலவகையான சிரமங்கள் மத்தியில் தமது பயணத்தை மேற்கொண்டு வருகிறுர்கள்.

-162

## கிழக்கு மாகாணத்தில் யூரியாவுக்குபடையினர்தடை கசிப்புக்கு தாராள அனுமதி

(அம்பாறை)

உலக நாடுகள் பலவற்றிலும் தடை செய்யப்பட்ட பொருள் ஒன்றுக்கு கிழக்கில் தடையேதும் கிடையாதாம். இது அப்பகுதி மக்களை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது.

தங்கள் நெல் வயல்களுக்கு யூரியா போன்ற உரவகைகளை எடுத்துச் செல்வது அங்கு முடியாத காரியமாக இருக்கிறது. படையினர் யூரியாவை எடுத்துச் செலல அனுமதிப்பதில்லை.

ஆனல் கசிப்பு எந்த அளவும், எடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கின்றது. அதனை படையினர் அங்கு தடுப்பதில்லையாம், -கி

## சைக்கிள் திருட்டு

(ஆனை பந்தி)

இரண்டு சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளதாக காவல் துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சுன்னகத்தைச்'சேர்ந்த ச. திருதினி என்பவர் நல்லூர் ஆலய தரிசனத்திற்காகச் சென்று சைக்கிளைபூட்டிவைத்திருந்தபோது அவரது சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

கல்வியங்காட்டு சந்தைப் பகுதியில் பூட்டாது விடப்பட்டிருந்த கா. தட்சணுமூர்த்தி என்பவருடைய சைக்கிளும் திருட்டுப்போயுள்ளது. இத் திருட்டுக்கள் பற்றி யாழ். காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

- 101

## விஜயகுமாரதுங்கா கொலைக்கு முன்னுள் அமைச்சரின் ஆயுதம் பயன்படுத்தப்பட்டது

(கொழும்பு)

நடிகர்விஜய குமாரணதுங்க கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் முன்னுள் இராஜாங்க அமைச்சர் காமினி லொக்குகே சொந்தமானது என்ற அதிர்ச்சி தகவல் ஒன்றுதற்போது வெளியாகியுள்ளது.

நடிகர் விஜய குமாரதுங்க கொலை வழக்கு தொடர்பாக நடைபெற்றுவரும் ஜனதிபதி ஆணைக்குழுமுன் சாட்சியமளிக்கையிலேயே சாட்சி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் பிராங்டீ சில்வா உட்பட பல முக்கியஸ்தர்கள் இவ்விசாரணையில் சாட்சியமளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

க-ரி

## ஈழத்து படைப்பிலக்கிய செல்நெறி இருநாள் ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும் 'ஈழத்துப் படைப்பிலக்கியச் செல்நெறி' என்ற இருநாள் ஆய்வரங்கு நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9-30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஈழத்துக் கலை, இலக்கியங்கள் குறித்த ஒரு மதிப்பீடாகவும், பாடசாலை உயர்தர மாணவர்களினதும் மற்றும் கலைத்துறை மாணவர்களினதும் இலக்கிய ஆர்வலரினதும் இலக்கியச் செழுமை கருதியும் இந்த ஆய்வரங்கு நடத்தப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா, சுப்பிரமணியன், பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையிலான முதல் நாள் அமர்வில் 1950 தொடக்கம் 1990வரை தமிழின உணர்வும் இலக்கியமும் என்ற தலைப்பிலும், இரண்டாம் நாள் அமர்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் 'வெளிச்சம்' சிறுகதைகள் — ஒரு மதிப்பீடு என்ற பொருளிலும் உரையாற்றுவர். ரி

## செய்முறைப் போட்டி

[யாழ்ப்பாணம]

ஜூலை 5 கரும்புலிகள் நாளை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலைகளில் ஆண்டு 10 மாணவர்களுக்கிடையேமாணவர் அறிவியல் கழகத்தால் அறிவியல் (விஞ்ஞான) செய்முறைப்போட்டி இம் மாத நடுப்பகுதியில் நடத்தப்படவிருக்கின்றது.

இதற்கான விளக்கமும், விண்ணப்பமும் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெருத பாடசாலைகள் மாணவர் அறிவியல் கழகத்துடன்தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். -சி

## வடமராட்சி பகுதியில் பயிர்பதிவு நடவடிக்கை

(நெல்லியடி)

வடமராட்சிப்பகுதிகிராமிய உற்பத்திக் குழுவின் ஏற்பாட்டில் கமக்காரர்களுக்கான பயிர் பதிதல் நடவடிக்கைகள் வடமராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாளை பத்தாம் திகதி

திகதி காலை வியாபாரி மூலை கமக்காரர்கள் கலைமணி சனசமூக நிலையத்திலும், 12ம் திகதி காலை வல்வை தென்மேற்கு, கமக்காரர்கள் பொலிகண்டி மேற்கு சனசமூக நிலையத்திலும்,மாலை பொலிகண்டி கிழக்கு, பொலிகண்டி தெற்கு, கமக்காரர்கள் பொலிகண்டி வீரபத்திரர் கோவிலடியிலும் பதிவு செய்து கொள்ளலாம்.

இப்பதிவுகளுக்கு உதவும் வகையில் கமக்காரர்கள், தமது கமக்காரர் அட்டையுடன் சமூகமளிக்குமாறு கேட்கப்படுகின்ருர்கள்.

-160

# கிளிநொச்சியில் மருத்துவ, சுகாதார சேவைகள் மோசமாகப் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் கிளிநொச்சியில் மருத்துவ சுகாதார சேவைகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி அரச வைத்திய சாலையின் பல முக்கிய செயற்பாடுகள் பாதிக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

டீசல் தடைசெய்யப்பட்டுள்ளதால் அம்புலன்ஸ் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆண்டில் இரண்டாம் காலாண்டிற்கான மருந்துகள் எதுவும் இதுவரை அனுப்பப்படவில்லை. முதல் காலாண்டின் குறித்த தொகுதி மருந்துகள் இன்னமும் வவுனியாவில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக செலைன், பென்சிலின் வைக்சின். போன்றவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தனியார் மருந்துக் கடைகளிலும் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுளளது. இதனால் நோயாளர்கள் பெரிதும்சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி வைத்திய சாலையில் போதிய பணியாளர்கள் இல்லாததால் நெருக்கடி ஏறபட்டுள்ளது. வைத்திய சாலை வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல்களின்படி 12 எம். பி. பி. எஸ், வைத்தியர்களுக்கு பதிலாக ஒரு வைத்தியர் பணிபுரிகிறார்-

21 தாதியர் தேவை உள்ள போதிலும் 7பேரே பணிபுரிகின்றனர். பல்வைத்தியர் எவரும் இல்லை. ஒன்பது மருத்துவ மாதர்களின் இடங்களுக்கு நான்கு பேரே நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பல்வேறு காரணங்களினால் கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பாதிப்படைந்து வருகின்றன. ரி

# சீ-டான்சர் மாலுமிகள் கல்யாணியில் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

'லங்கா கல்யாணி' கப்பல் கடந்த மூன்று நாட்களாக காங்கேசன் துறைமுகத்துக்கு செல்லவில்லை.

இக்கப்பல் துறைமுகத்துக்கு பல மைல்கள் தூரத்தில் ஆழ்கடலில் இரவு நேரங்களில் நங்கூரம் இட்டு தரித்து நின்றது.

இதே வேளை கடற்கண்ணியில் சிக்கி சேதமடைந்த சீ. டான்சர் கப்பலில் பயணம் செய்த இரு பயணிகளும் ஒன்பது மாலுமிகளும் நேற்று முன்தினம் 'லங்கா கல்யாணி' கப்பல் மூலம் பருத்தித் துறைக்கு வந்தனர்.

லங்கா கல்யாணியில் இருந்து பொருட்கள் இறக்கும் வேலைகள் முடிவுற்றதும் மாலுமிகள், பயணிகள் இருவரும் கொழும்புக்கு அக் கப்பலில் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 170-சி

## சூழல் பாதுகாப்பின் மூலம் ஆரோக்கிய வாழ்வைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

உலகளாவிய ரீதியில் காலத்துக்குக்காலம் வெவ்வேறு வகையிலான எவ்வளவோ பாரிய மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. ஆராய்சியாளர்கள் இந்த வகையான மாற்றங்களை எல்லாம் காலத்துக்குக்காலம் ஆராய்சிசெய்து வந்தபோதிலும் இம் மாற்றங்களுக்கான சரியான விடை இது வரை காணப்படவில்லை

யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட உலக சூழல தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தனதுரையில் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்புப் பொறுப்பாளர் பூங்குன்றன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மங்கள விளக்கை யாழ் மாவட்டபதில் அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம், திட்டப்பணிப்பாளர் செ. பத்மநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை தொடர்ந்து உரையாற்றுகையில்:

எமது தமிழ்ப் பிரதேசம் இயற்கை அழிவுகளால் என்றும் பாதிக்கபபடவில்லையாதலால் இது ஒரு புண்ணியபூமி என்றே கூறவேண்டும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடு ஒன்றில் நீர் மற்றும் கல்வி முக்கியமாக அமைகிறது. இந்தவகையில் எமது பிரதேசத்தில் நீர் இல்லை என்கின்ற பிரசசனை இலலை.

எமது நகரத்தைத் துப்பரவாக வைத்திருக்க வேண்டியது எமது கடமையாகும். சர்வதேச ரீதியாக இன்று நாம் பார்ப்போமேயானால் இங்கெல்லாம் எவ்வளவோ மாற்றங்கள் நடைபெற்று வருகிறது. எமது பிரதேசத்தில நாம் இயற்கையோடு இணைந்திருப்போமேயானல் எமது சூழலைப்பாதுகாப்பதன் மூலம் ஒரு நல்ல ஆரோக்கியமான வாழ்க்கையை நாம வாழலாம் என்றார்.

இறுதியாக போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டது. 162 - கி

## கரையோர மண் அள்ளுவதை ஒழுங்குபடுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கரையோரங்களில் மண் அள்ளுவதால் ஏற்படும், அபாயத்தை தடுக்க ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அண்மையில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடாத்தியுள்ளது

யாழ்ப்பாணத்தில் கல்லுண்டாய், காக்கைதீவு, கரையோரங்களில் உள்ள உப்பளப் பகுதிகளில் (ஊரி) மண் அள்ளுவதாலும்' அரியாலை கிழக்கு கரையோரப் பகுதிகளில் (மண்), மண் அள்ளுவதாலும் கடல்நீர் நாட்டுக்குள் வரும் அபாயம் ஏற்படும். அத்துடன் கடல் பெருக்கு ஏற்படும் காலத்தில் அள்ளும் இடங்களில் உவர்நீர் தேங்குவதால் அப்பகுதி அண்மித்த இடங்களில் கிணறுகளின் நீர் உவர்நீராக மாறுவதோடு இவ்விடங்களில் பயன்தரு தாவரங்களும் உருவாகமாட்டாது.

இவ்வாறான பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும், மண் அள்ளுவதை ஒழுங்குபடுத்தவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விவசாய சூழல் பாதுகாப்புப் பகுதி துறைசார் நிபுணர்களையும் யாழ். செயலக பிரதிநிதிகளையும் இணைத்து கலந்துரையாடியுள்ளது. -சி

## திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதிகளில் தற்பொழுது திருடர்களின் தொல்லை அதிகரித்து வருவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

செல்தாக்குதலைதொடர்ந்து அச்சுவேலி, பத்தமேனி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளிலேயே திருட்டு இடம்பெறுவதாக கூறப்படுகிறது. -162

## விசர் நாய் கடித்து யுவதி மரணம்

[யாழ்ப்பாணம்]

விசர் நாயினால் கடியுண்ட இளம் பெண் ஒருவர் அதற்குரிய சிகிச்சை பெறாமையினால் ஒருமாதத்தின் பின் மரணமானார்:

விசர்நாய் கடிக்கான தடுப்பு ஊசிமருந்தை [எ. ஆர். வி] பாவிக்காது கவனக் குறைவாக இருந்தமையாலேயே அவர் இந்நோய்க்கிலக்காகி ஒருமாதத்தின் பின் கடந்த வாரம் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் அங்கு மரணமானார்.

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ரி. ஷைலா [25வயது] என்ற இளம் பெண்ணே மரணமானவராவார்' 90-சி

## நாயினால் கடியுண்ட வயோதிபர் மரணம்

[யாழ்ப்பாணம்]

நாயினால் கடித்துக்குதறப்பட்டு ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் நள்ளிரவு அங்கு மரணமானார். கடந்த 31ம் திகதி இவர் நாயினால் கடியுண்டார்.

சண்டிலிப்பாய் தொட்டிலடியைச் சேர்ந்த சின்னவன் முருகேசு [65வயது] என்ற வயோதிபரே இறந்தவராவார், மரண விசாரணையின் பின் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது .90.சி

## இளைஞன் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக சென்று கொண்டிருந்த மினிபஸ்கள் ஒன்றை ஒன்று முந்திச்செல்ல முற்பட்ட வேளை மினிபஸ்ஸின் மிதிபலகையில் நின்று கொண்டு சென்ற ஒருவர் இரு மினிபஸ்களுக்குமிடையில் சிக்குண்டு படுகாயமடைந்தார்.

மந்திகையில் நேற்று முன்தினம இடம் பெற்ற இந்த விபத்தில வரணியைச் சேர்ந்த செல்லையா நவரத்தினம்[20 வயது] என்பவரே படுகாயமடைந்தவராவார் தற்போது இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்-90சி

## கரும்புலிகள் நினைவாக விஞ்ஞான அறிவுப் போட்டி

[திருநெல்வேலி]

யூலை 5ல் அனுஷ்டிக்கப்படவுள்ள கரும்புலிகள் நினைவு தினத்தை முன்னிட்டு தமிழீழ மாணவர்களிடையே மாணவர் அறிவியல் கழகம் விஞ்ஞான செய்முறைப் போட்டி ஒன்றை நடாத்த உள்ளது.

ஆண்டு 10 கல்வி பயிலும் பாடசாலை மாணவர்களுக்கிடையே இப்போட்டி நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டியில் ஒவ்வோர் பாடசாலையிலிருந்தும் இரண்டு மாணவர்கள் பங்குபற்றலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது-

போட்டிகள் கோட்ட ரீதியாக முதலில் நடைபெற்று பின்னர் மாவட்ட ரீதியாக நடாத்தப்பட உள்ளது இப் போட்டிகளை வருடா வருடம் மூன்று மாதத்தில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டு 8 9 10 பாடத்திட்டங்களைத் தழுவியதாக போட்டி இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது;157-கி

## இராசி பலன்

09-06-1995

வெள்ளிக்கிழமை

[தமிழுக்கு வைகாசி-26]

ஏகாதசி மாலை 7.02 வரை, சித்திரை மு. இ. 7.31 வரை மரணயோகம். இராகுகாலம், காலை 10.22 முதல் 11 52 வரை சுபவேளை காலை 5.52 முதல் 7.22 வரை:

மேஷம்: அந்தரங்க களிப்பு, தொழில் அனுகூலம், பண வரவு.

இடபம்: மன மகிழ்ச்சி, தொழில் முதலீடு; காரிய சித்தி.

மிதுனம்: கருத்துவேறுபாடு, குடும்பக்கவலை, அனாவசிய செலவு.

கடகம்; உடல்நலக்குறைவு. நிலைமாற்றம், கெட்டகனவு.

சிங்கம்: தருமப்பணி, மனச்சசந்தி. பயண அனுகூலம்.

கன்னி: பெரியவர் கோபம், தொழில் கஷ்டம், அலைச்சல்.

துலாம்: மதிப்பு உயருதல், சுபகாரியம், முயற்சி வெற்றி.

விருச்சிகம்: வேண்டாத தொல்லை, பெற்றோர் வெறுப்பு, அகால உணவு.

தனுசு: தொழில்விவகாரம், மந்தபுத்தி, கடமை தவறுதல்.

மகரம்; தெய்வீகசிந்தனை, கடன்வரவு, குடும்பநன்மை.

கும்பம்: உறவினர் துன்பம். அகங்காரம் தனிமைப்படல்.

மீனம்; மதிப்பிறங்கல், குடும்பகலவரம், ஆண வ போக்கு.

— ஜோஸ்யர்

## மட்டு அஞ்சல்பயிற்சியகத்தை ஜூலையுடன் மூடிவிட முடிவு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பிலுள்ள அஞ்சல் பயிற்சி நிலையத்தை மூடிவிடுவதற்கு தபால்த்தந்தி தொடர்புகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த பயிற்சி நிலையத்தை இவ்வருடம் ஜூலை மாதத்துடன் மூடிவிட அப்பிராந்தியத்துக்குப பொறுப்பான பிரதித் தபால்மா அதிபரினால் சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகவும் இதனை அம்மாவட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆட்சேபித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கடந்த வருடம் ஜனவரி மாதம் இப்பயிற்சிக்கல்லூரி ஆரம்பிக்கபபட்டிருந்தது. தற்பொழுது அஞ்சலதுறையினருக்கு முகாமைத்துவம் பற்றிய பயிற்சி தமிழ் மொழியில் இங்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது. கி சி

## நிபந்தனையுடன் பொருட்களை விற்பனை செய்வது குற்றம்

(கொழும்பு)

வர்த்தகர்கள் பொருட்களை பாவனையாளர்களுக்கு நிபந்தனையுடன் விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் வேளைகளில் வேறு பொருட்களை வாங்கினால்த்தான் அப்பொருளை வழங்க முடியும் அல்லது தரம் குறைந்த பாவனையாளர் விரும்பாத ஒருபொருளை கட்டாயம் வாங்க வேண்டுமென நிபந்தனை விதிப்பது குற்றமாகும்.

பொருளைத் தெரிவு செய்வதற்கும், பற்றுச் சீட்டைக் கோருவதற்கும், களஞ்சியப் படுத்தல் விதம் குறித்து தனது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கும் ஒரு பாவனையாளருக்கு உரிமையுண்டெனவும் பதில் உள்நாட்டு வர்த்தக ஆணையாளரினால் விடுக்கப்பட்ட அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. கி - சி

## ஆய்வுப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

தற்போது ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக மக்கள் எதிர்நோக்கும்அனர்த்தங்களையும் அவற்றினால் ஏற்படும் பாதிப்புக்களையும் சமாளிப்பதன் வழிமுறை அவற்றிற்கான ஒழுங்கமைப்பையும் இனங்காணுவது சம்பந்தமான ஆய்வுப்பட்டறை எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறும்.

தமிழர் புனர் வாழ்வுக் கழகம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துடன் இவ் ஆய்வுப்பட்டறையை நடத்தும். 170 - சி

## இதழியல் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இதழியல் அடிப்படைக் கற்கைநெறி தொகுதி 4 இன் ஆரம்ப வைபவம் எதிர்வரும் 17 ம் திகதி சனிக்கிழமை பி. ப 2 மணிக்கு செல்வநாயகம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இக் கற்கைநெறி பயில ஆர்வம் கொண்டோர் உடனடியாக புறநிலைப் படிப்புகள் அலகிற்கு விண்ணப்பிக்கும்படி இணைப்பாளர் கோருகின்றார். -ரி

பத்திரிகை சுதந்திரத்தை வலியுறுத்தி

# அரசுக்கெதிராக கொழும்பில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி

(கொழும்பு)

தொடர்புசாதன சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் வலியுறுத்தி நேற்று அரசுக்கெதிராக கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடாத்தப்பட்டது.

கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் வர்த்தக கைத்தொழிலாளர் சங்கமும், வேறு பலசங்கங்களும் கலந்துகொண்டதுடன் தொடர்பு சாதனத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

தொடர்பு சாதன சுதந்திரமும், இத்துறையில் ஈடுபட்டோருக்கு தகுந்த பாதுகாப்பும் வழங்க வேண்டுமென்று ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசுக்கெதிராகக் கோஷங்களை எழுப்பினர்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலமாகச் சென்று கொழும்பு பொதுநூலக மண்டபத்தில் கூட்டமொன்றையும் நடாத்தினர்கள்,

மேற்படி ஆர்ப்பாட்டப் பேரணியால் கொழும்பில் சில மணி நேரம் போககுவரத்துக்கள் சீர்குலைந்திருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சந்திரிகா அரசுக்கெதிராக தொடர்புசாதனத் துறையினரும். தொழிலாளர்களும் இணைந்து நடாத்தியமாபெரும் ஆர்ப்பாட்டமாக இதனை கருத்திலெடுக்க வேண்டியுள்ளதாகவும், இவ் அரசை பதவியிலமர்த்த முக்கிய பங்குவகித்த தொடர்பு சாதனத்துறையினர் இவ்வளவு விரைவில் அதன்மேல் அதிருப்திகொண்டுள்ளமையை ஆரோக்கியமான ஒரு செயலாகக் கருத முடியாதெனவும் செய்தி ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். வி-கி

## சிறிய மின் இயந்திரங்கள் மூலம் ஆஸ்பத்திரிக்கு மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனு வைத்தியசாலையில் தற்போது நிலவும் டீசல் பற்றுக்குறையை சமாளிப்பதற்காக சிறிய மின்இயந்திரங்கள் வைத்தியசாலையின் நாளாந்தப் பாவனையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

தற்போது அங்கு இயங்கிவரும் 200 கே. வி மின் இயந்திரத்தின் பாவனையைக் குறைத்து சிறிய மின்சார இயந்திரங்களை இயக்க வைத்து டீசலை ஓரளவு மிச்சப்படுத்தவே இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது

இதற்காக அச்சுவேலி ஆஸ்பத்திரியில் இயங்காதிருக்கும் சிறிய மின்சார இயந்திரமான 17 கே வி. மின்சார இயந்திரத்தை யாழ். போதனு வைத்தியசாலைக்கு எடுத்து வந்து வைத்தியசாலையின் பாவனையில் ஈடுபடுத்தியுள்ளது

200 கே. வி. இயந்திரத்தை இயங்க வைக்க ஒரு மணித்தியாலத்திற்கு 30 லீட்டர் டீசல் செலவாகும் எனவும் 17 கே. வி. இயந்திரத்தை இயங்க வைக்க ஒரு மணித்தியாலத்திற்கு 7 லீட்டர் டீசல் போதுமானது எனவும் அத்தியாவசிய பாரியதேவைகளுக்கு பெரிய இயந்திரத்தையும், ஏனைய சிறிய தேவைகளுக்கு சிறிய இயந்திரத்தையும் பாவிக்க நிர்வாகம் முடிவு செய்துள்ளது. 90 சி

## யாழ்போதனுவைத்தியசாலை தொலைத் தொடர்பு பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலையின் உள்ளக தொலைத் தொடர்பு சாதனங்கள் செயலிழந்துள்ளன.

இதனுல் வைத்தியசாலையின் பல்வேறு பிரிவுகளுக்கிடையேயான உள்ளக தொலைத் தொடர்புகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த தொலை தொடர்பு சாதனங்களில் ஏற்பட்டுள்ள கோளாறை திருத்தியமைக்க வைத்தியசாலையின் தொலை தொடர்பு ஊழியர் எடுத்த முயற்சி கைகூடவில்லையெனவும், இதனைத் தொடர்ந்து வடக்கு-கிழக்கு மாகாண தொலைத் தொடர்பு இணைக்கள பொறியியலாளர்களின் உதவியை வைத்தியசாலை நிர்வாகம் நாடியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. 170 கி

6 தினங்களுக்கு முன் வீழ்த்தப்பட்ட

## அமெரிக்க விமானத்தின் விமானி நேற்று உயிருடன் மீட்பு

(லண்டன்)

பொஸ்னிய சேர்பியர்களினுல் கடந்தவாரம் சுட்டுவீழ்த்தப்பட்ட அமெரிக்க விமானத்தின் விமானி நேற்றுஉயிருடன் மீட்கப்பட்டார்.

மேற்படி விமானத்தின் விமானியானகப்டன் ஸ்கொட், தான் கையில் வைத்திருந்த சிறிய வானெலிப் பெட்டியின் மூலம் கொடுத்த சமிக்ஞையைத் தொடர்ந்து இவரைத் தேடிக்கண்டு பிடிக்கும் பொறுப்பு அமெரிக்ககடற்படை அதிரடிப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது.

விமானி கடந்த ஆறு நாட்களாக ஒழிந்திருந்த காட்டுக்கு 500 மீட்டர் தொலைவில் அமெரிக்க கடற்படையின் ஹெலிக்கொப்டர்கள் இரண்டு தரையிறங்கி விமானியான கப்டன் ஸ்கொட்டை மீட்டனர்.

கப்டன் ஸ்கொட் நல்ல தேகாரோக்கியத்துடன் இருப்பதாக, லண்டனில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் மாநாட்டில் நேட்டோ தளபதி அட்மிரல் லேஷன் ஸ்மித் தெரிவித்தார். -வி-கி

வலிக்க இரத்தம் உறிஞ்சிடும் நுளம்பு
வலி தெரியாமல் உள்ளவையெல்லாம்
இழுத்துக் கொள்வான் அவன் உளவாளி
இன்ற கவனி!
இனங்காண்!!
அறிவி!!!

## வடபகுதிக்கான

[1ம் பக்கத்தொடர்ச்சி]

ந்து நோயாளர்களுக்கான சேவையும் உணவுப் பொருட்களை ஏற்றிவரும் பணியும் வழமைபோல் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. க-கி

## இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட அவர் பி. பி, சி. நிருபருக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார் அவர் அப்பேட்டியில் மேலும் கூறுகையில்: இலங்கை பிரிவினை செய்யும் வாய்ப்பை அடியோடு தான் நிராகரிப்பதாக தெரிவித்த அவர் வடக்கு-கிழக்கில் ஓரளவான தன்னுட்சி அதிகாரம்மட்டுமே தரப்படும் என்பதனை மீண்டும் வலியுறுத்தினுர்.

விடுதலைப் புலிகளை பொறுத்த மட்டில் அவர்களின்குறைகளை தீர்க்க இராணுவ அணுகுமுறை சிறந்ததல்ல என்பதனை இராணுவ வழிமூலம் காட்டுவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் உலக சந்தையில் ஆயுதங்களை வாங்க முயன்றுவருகிறது என்றும் இதுவரையில் அம் முயற்சிக்கு எதுவித சிரமும் இல்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளும் வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களை வாங்கி வருவதாகவும் அவ் ஆயுதங்கள் கப்பல் மூலம் கொண்டுவரப்படுவதாகவும் இது விடயத்தில் இலங்கை-இந்திய அரசாங்கங்கள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றபோதிலும் அவ் ஆயுதங்கள் ஏதோ ஒரு வழி மூலம் நாட்டிற்குள் கொண்டுவரப்படுவதாக அரசாங்கம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனுல் இதனைத் தடுக்க முடியவில்லையென்றும் வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்,

இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வேண்டுமென தெற்காசிய நாடுகள் வலியுறுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனுல் இது எவ்விதமாக முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பது குறித்து எதுவித கருத்தையும்அவை முன்வைக்கவில்லையென்றும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அரசாங்கம் அமைதிப் பேச்சுக்கள் முறிவடைவற்கு முன்னுல் இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடக் கூடாது என்ற கொள்கையை கடைப்பிடித்து வந்ததாகவும் ஆனுல விடுதலைப் புலிகள் தரையிலிருந்து வான் நோக்கி ஏவப்படும் ஏவுகணைகள் மூலம் இலங்கை இராணுவ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவமானது புதுடில்லியின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் புதுடில்லி கவலைப்பட ஆரம்பித்துள்ளது என்றும் தெரிவித்தார். க-கி

## பாதுகாப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பதாலேயே இந் நடவடிக்கை குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## வடக்கு-கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தும் வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. இறக்குமதிப் பொருட்கள். உள்நாட்டுப் பொருட்கள் ஆகியவற்றின் பாதுகாப்பு வரிகள் அதிகரிப்பதன் மூலமும், அரசுடமைச் சொத்துக்களை தனியார் மயப்படுத்தும் திட்டத்தை துரிதப்படுத்துவதன் மூலமும், அரசுடமை மின்சாரவாரியத்தின் லாபத்தின் ஒரு பகுதியை எடுத்துக் கொள்வதன் மூலமும் புதிய வருவாய்கள் கிடைக்கும்.

அரசின் இப்புதிய நடவடிக்கைகள் குறித்து யாரும் அரசு மீது குறை கூற மாட்டார்கள் என்றும் அமைச்சர் பீரிஸ் கூறினுர். -வி-கி

## விமானநிலைய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

இவ் இரு இளைஞர்களும் வயோதிப மாது ஒருவரின் மேல்மாடி வீட்டில் கடந்த இரு வருடங்களாக வசித்து வந்தவர்கள் எனவும் இவர்கள் வாசனங்களை கொள்வனவு செய்வதற்கும், கார் விற்பனையாளர்களைபோல் தங்களை காட்டிக் கொண்டனர் என பொலிஸ் வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய பிராந்தியத்தில் நிறுத்தப்பட்ட ஹை-ஏஸ் வானில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக பொலிசார் தீவிர தேடுதல் வேட்டை நடாத்தி வருவதையடுத்து இவ் இருவரும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. -க-கி

இராணுவம் தாக்குதல் தொடுக்க வேண்டுமானுல் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்படும் நிதியை அதிகரித்தல் அவசியம் என்றும் பீரிஸ் தெரிவித்துள்ளார்

இதேவேளையில் பாதுகாப்பு வரியை 3·5 வீதத்திலிருந்து 4·5 வீதமாக அதிகரிப்பது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவது தெரிந்ததே. க-கி

## உணவுப் பொருள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வைத்தியசாலைகளுக்கான மருந்து வகைகளை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை தற்பொழுது கொழும்பில் தங்கி நிற்கும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே பொன்னம்பலம் மேற்கொண்டு வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

இதேவேளை செஞ்சிலுவைச் சங்கத்தால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பலொன்று அத்தியாவசியப் பொருட்களுடன் நேற்று காங்கேசன் துறையை வந்தடைந்ததாக ஐ. சி. ஆர். சி. யின் அதிகாரி தெரிவித்தார்,

(162-க-கி)

## 3 லட்சம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவில் குடியேறுவோரின் தொகையை 25 வீதமாகக்குறைக்கவும் புதிய நாடுகடத்தும் திட்டத்தை அறிமுகப்படுத்தவும் எல்லை கடந்து வருவோருக்கு கட்டணம் அறவிடவும் இச்சட்டத் திருத்தம் வழிகோலியுள்ளது.

எனினும் தற்போது அமெரிக்காவில் சட்டபூர்வமாகக் குடியேறியுள்ள ஒருவர் தனது மனைவியை அல்லது சிறு குழந்தையை அமெரிக்காவுக்கு தன்னுடன் அழைத்துக் கொள்வதை இப்புதிய சட்டம் இலகுவாக்கியுள்ளது. கி-சி

அனுமதி கிடைத்ததை தொடர்ந்து

## 'ஹபரணவில்' மருந்துவகைகளை இங்கு எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலைக்கான மருந்து வகைகளை எடுத்து வருவதற்கு கொழும்பிலுள்ள மருந்துசபையும், பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவும் அனுமதி வழங்கியுள்ளது.

அனுமதி கிடைத்தும் கப்பல் வசதியின்மையால் வைத்தியசாலை நிர்வாகம் அவற்றை இங்கு எடுத்து வருவதில் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இரண்டாம் காலாண்டுக்கான மருந்து வகைகளின் ஒரு தொகுதியை கொழும்பில இருந்து திருமலைக்கு எடுத்துச் சென்று அங்கிருந்து மாவை ஏற்றிவரும் 'ஹபரண' கப்பலில் அவற்றை இங்கு அனுப்பி வைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

-170-கி

## நீண்ட இடைவெளியின்பின் சபை அமர்வுகளில் அனுரா

(கொழும்பு)

ஜனுதிபதியின் சகோதரரும், பிரதமரின் மைந்தருமாகிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுராபண்டாரநாயக்கா நீண்ட இடைவெளியின் பின்னர் நேற்று சபை அமர்வுகளில் கலந்துகொண்டார்

இவர் வெளிநாட்டில் நீண்ட விடுமுறையில் இருந்து வந்தினுல் சபை அமர்வுகளில் இவரைக் காண முடியாதிருந்தது.

தாய், சகோதரி, தம்பி உறவு நிலைபற்றிய பல்வேறு வதந்திகளுடன் இவரின் வெளிநாட்டு விஜயம் கடந்த காலங்களில் சம்பந்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கது. -கி

## கொழும்புத் தபால்களை அனுப்ப மாற்று ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தபால்களை "ஹபரண" கப்பலில் இங்கிருந்து திருகோணமலைகு அனுப்பி வைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக வடமாகாண உதவி அஞ்சல் அதிபர் நாயகம் எஸ். சடாட்சரநாதன் நேற்று தெரிவித்தார்.

முன்னர் இத்தபால்களை 'சீ-டான்சர்' கப்பலிலேயே வாரம் தோறும் அனுப்பி வைப்பது வழக்கம்.

'சீ-டான்சர்' கடற்கண்ணியில் சிக்கி சேதமடைந்ததை தொடர்ந்து தபால் சேவை சில தினங்களாக பாதிக்கப்பட்டிருந்தது.

இதனை தொடர்ந்து திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கு மாவை ஏற்றி வரும் 'ஹபரண' கப்பலில் இங்கிருந்து தபால்களை திருகோணமலைக்கு அனுப்பி வைப்பதற்கான மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

-170-கி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் [illegible] ரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 09-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

[illegible] a Newspaper at the General Post Office
[illegible] 613